1970 மார்ச் 14]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அது ஒரு கொள்கைப் பிரச்சினை.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, அரக்கோணம் நகராட்சி அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு, அந்த நகராட்சியின் நிதி நிலை பற்றுக்குறையாக இருப்பதால், மூலதனச் செலவைக் குறைத்துக்கொள்ள யோசனை சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். நகராட்சிக்கு அலுவலகக் கட்டடம் அவசியம். ஆகவே, அரசாங்கம் அரக்கோணம் நகராட்சிக்குத் தனி உதவி கொடுத்து கட்டடத்தைக் கட்ட முன்வருமா?

மாண்புமிகு மா. முத்துசாமி: பற்றுக்குறை நிலை சுட்டிக் காட்டப் பட்டிருக்கிறதே தவிர, இதனால் வேலைகள் தடைபட வேண்டும் என்று கட்டளை இல்லை. நகராட்சி மன்றத்திற்குக் கட்டடமும் அவசியம்; நிதி வருவாயும் அவசியம்தான்.

Vriddhachalam Municipality

* 380 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) Whether the Government have decided to convert Virddhachalam Panchayat into a municipality ; and

(*b*) If so, for what reasons and from which date?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 1970-ஆம் ஆண்டு சனவரி 17-ம் நாளில் இருந்து விருத்தாசலம் பேரூராட்சி நகராட்சியாக அமைக்கப் பெற்றிருக்கின்றது.

(இ) ஒரு பேரூராட்சி நகராட்சியாக மாறுவதற்கு சட்டத்தில் குறிப்பிட்ட தகுதிகளை விருத்தாசலம் பேரூராட்சி பெற்றிருந்த படியாலும், விருத்தாசலம் பேரூராட்சியும், விருத்தாசலம் ஊராட்சி ஒன்றியமும் விருத்தாசலம் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவதற்குத் தீர்மானித்தபடியாலும் விருத்தாசலம் ஒரு நகராட்சியாக மாற்றப்பெற்றது.

திரு. கே. விநயகம் : தலைவர் அவர்களே, ஒரு பேரூராட்சி நகராட்சியாக ஆக வேண்டுமென்றால், ஒரு சில விதிகள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த விதிகளுக்கு இணங்க விருத்தாசலம் முனிசிபாலிட்டி அமைந்திருக்கிறது என்று சொன்னார்கள். அந்த முனிசிபாலிட்டிக்கு இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் இருக்கிறதா ? 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஜனத்தொகை இருக்கிறதா ? அல்லது இரண்டும் சேர்ந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, விதிகள் என்ன என்பதை உறுப்பினர் அவர்களே சொல்லிவிட்டார்கள். இருபது ஆயிரத்துக்கு மேற்பட்ட ஜனத்தொகையும், ரூ. 2 லட்சத்திற்கு மேற்பட்ட வருமானமும் உடையதாக விருத்தசாலம் பேரூராட்சி இருப்பதாலே, அது நகராட்சியாக மாற்றப் பெற்றது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விருத்தாசலம் நகராட்சியாக அமைப்பதற்கு 7-11-1969-ஆம் தேதி அரசாங்க ஆணையின்படி கண்டியாங்குப்பம் என்ற ஊர் சேர்க்கப் பட்டிருந்தது. ஆனால் 12-1-1970-ஆம் தேதி ஆணையின்படி முதலில் சேர்க்கப்பட்டிருந்த கண்டியாங்குப்பம் என்ற சிற்றூர் சேர்க்கப் படவில்லை. அதற்கு என்ன காரணம்? அந்தப் பகுதியில் மிகவும் பின்தங்கிய வன்னிய சமுதாய மக்கள் இருப்பதாலே அவர்களை வேண்டுமென்றே புறக்கணித்து, தவறான தகவல்களை அரசுக்குத் தந்துவிட்டார்களோ என்று அப்பகுதியினர் எண்ணுகிறார்கள். விருத்தாசலம் பஞ்சாயத்து யூனியனில் இருக்கும் அண்ணா நகருக்கு அருகில் இருந்தும் அந்த சிற்றூர் விடப்பட்டிருக்கிறது. ஆகவே, அதைச் சேர்த்துக்கொள்வதற்காக மீண்டும் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, தென் ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வன்னிய சமுதாய மக்கள் பெரும்பாலும் இருக்கிறார்கள். வன்னிய சமுதாயத்தின ருக்குப் பாரபட்சம் காட்டப்படுவதாக உறுப்பினர் அவர்கள் கூறுவது பொருத்தமல்ல. நகராட்சி அமைப்பில் அந்த ஊர் சேர்க் கப்படாமல் விட்டதைப்பற்றி உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். வன்னிய சமுதாயத்தினருக்கு எந்த விதமான அநீதியும் வழங்க வில்லை. கண்டியாங்குப்பத்தின் ஒரு பகுதியை நகராட்சியில் வைத்துக்கொண்டு, மற்றொரு பகுதியை அண்மையில் உள்ள வேறு ஊராட்சியுடன் சேர்க்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்கள். இன்னொரு பகுதி தொலைவில் இருப்பதாலே வேறு ஊராட்சியுடன் சேர்க்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்கள். அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்து, மற்ற உறுப்பினர்களுடைய கருத்துக் களையும் கேட்டறிந்து, முடிவு எடுத்திருக்கிறது. இதில் எந்தவித மான ஜாதிப் பிரச்சனைக்கும் இடம் இல்லை.

கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு ரயில்வே செஸ் நிதி

***381 வினா.—திரு. இரா. மாணிக்கவாசகம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு ரயில்வே செஸ் நிதியாக மத்திய அரசிடமிருந்து எவ்வளவு தொகை எப்பொழுது கிடைக் கும்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கோயம்புத்தூர் மாவட்டத் தில் இரயில்வே செஸ் தீர்வை நிதியின் கீழ் ரூ. 37,80,544 ஈட்டுப் பத்திரங்கள் வடிவில் உள்ளது. இந் நிதி குறித்து, மத்திய அரசிடமிருந்து சேரவேண்டிய தொகை எதுவுமில்லை.

திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவர் அவர்களே, பொதுவாக ரயில்வே செஸ் நிதி எந்த விகிதத்தில் நமது மாநிலத்திற்குத் தரப் படுகிறது? நமது மாநிலம் எந்த விகிதத்தில் மாவட்டங்களுக்குப் பிரித்துக் கொடுக்கிறது?